

திருவோலை
2054 ஆனி
மாத இதழ்
வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# ஜென் கதை

ஒரு மலையடிவாரத்து கிராமத்தில் நன்செய் விவசாயி ஒருவர் இயற்கை முறையில் விவசாயம் செய்து கொண்டு குழந்தைகளோடு நிம்மதியாக வாழ்ந்து வந்தார்.

அவருடைய விவசாய நிலத்தில் வைரக்கல் இருக்கிறது என்று ஊர்மக்கள் சொல்லவதைக் கேட்டு விவசாயம் செய்வதை நிறுத்தி விட்டு குழி தோண்டி தேட ஆரம்பித்தார்.

விவசாய நிலத்தில் பல குழிகளைத் தோண்டியும் வைரக்கல் கிடைக்கவில்லை. அவனும் அவனது குடும்பமும் உணவின்றி மெலிந்து போயினர்.

என்ன செய்வது என்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்த நேரம் அவ்வழியே துறவி ஒருவர் சென்று கொண்டு இருந்தார்.

அவன் துறவியை அழைத்து 'நீங்கள் ஞானம் அடைந்தவர் தானே ஐயா' எல்லாம் அறிந்தவர் தானே ஐயா என்று சொல்லி நடந்ததை விவரித்தான்.

எங்கள் வயலில் எந்த இடத்தில் தோண்டினால் வைரக்கல் கிடைக்கும் என்று நீங்கள் சொல்லுங்கள் என்றான் .அதற்கு அந்த துறவியோ சிரித்துக் கொண்டே 'உங்கள் வயலில் வைரக்கல் இல்லை' என்றார்.

'உன்னைப் பற்றி முதலில் நீ தேடு' என்று சொல்லிய துறவி தன் வழியில் பயணிக்க ஆரம்பித்தார்.

—

ஸ்ரீவி. முத்துவேல்,
சென்னை.





# நீங்கள் குப்பையா? பறவையா...?



வெற்றி பெற்ற எல்லா மனிதர்களும் திறமைசாலிகள் இல்லை. வெற்றி பெற முடியாதவர்கள் எல்லோரும் திறமை இல்லாதவர்களும் இல்லை.

ஒரு மனிதன் தன் நிலையில் வெற்றி பெற்று தலைமை பொறுப்பிற்கு வந்து விட்டால் அது அவரது திறமை மட்டுமே காரணமாக இருக்க முடியாது.

அவரைவிட மிகத் திறமையானவர்கள் இருந்த போதிலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அவர்கள் விட்டுக்கொடுத்து உதவியதால் அவர் அந்த நிலையை அடைந்து இருக்கலாம். ஆனால் அந்த இடம் கொடுக்கப்பட்ட பிறகு தன் திறமையால் அந்த பதவிக்கு பெருமை தேடி தர வேண்டும். மாறாக தன் நிலையை காப்பாற்றி கொள்ள கடைசி வரை தனக்கு கொடுத்த பதவியை பயன்படுத்துவது அவரின் இயலாமையை காட்டும். வரலாறு அவரை தூற்றும்.

ஒரு சீடர் தன் குருவிடம் சென்று கேட்டார் "குருவே இந்த உலகத்தில் குப்பையும் காற்றில் பறக்கிறது, பறவையும் காற்றில் பறக்கிறது, இந்த இரண்டிற்கும் என்ன வேறுபாடு?"

குரு சொன்னார் " ஆமாம் குப்பையும் காற்றில் பறக்கிறது, பறவையும் காற்றில் பறக்கிறது ,ஆனால் காற்று ஓய்ந்ததும் குப்பை கீழே விழுந்துவிடும், பறவை மட்டுமே தொடர்ந்து பறக்கும்."

இதுவே வெற்றியாளர்களின் தாரக மந்திரம், ஒரு தேசிய பயிற்சியாளராக எனது பயிலரங்குகளில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் நான் விடுக்கும் செய்தி இதுவே.

ஒரு மனிதன் வெற்றி பெற, பெற்ற வெற்றியை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் குப்பையாக இருக்காதீர்கள், காற்று ஓய்ந்ததும் உங்கள் சுய ரூபம் வெளிப்பட்டுவிடும். உங்கள் திறமையை வளர்த்துக்கொள்ளுங்கள், பறவையாக இருங்கள் உங்கள் திறமை மீது நம்பிக்கை வையுங்கள், உங்களால் தொடர்ந்து பறக்க முடியும். பறவை மரக் கிளையில் அமர்ந்திருப்பது கிளை முறியாமல் இருக்கும் என்ற நம்பிக்கையில் அல்ல, கிளை முறித்தாலும் தன்னால் தன் சிறகுகளை பயன்படுத்தி பறந்து விட முடியும் என்கிற தன் இறக்கைகளின் மீது வைத்த நம்பிக்கையே.

ஒருவர் வகிக்கும் பதவிக்கு அவரின் திறமை மற்றும் செயல்பாடுகள் பெருமை சேர்க்கும் என்றால் நீங்கள் பறவையாக இருக்கிறீர்கள் என்று அர்த்தம். மாறாக நீங்கள் வகிக்கும்

பதவியினால் நீங்கள் பிழைத்துக் கொள்கிறீர்கள் எனில் நீங்கள் குப்பையாக உள்ளீர்கள் என்று அர்த்தம். அது மிகுந்த அவமானம். உங்களுக்கு அந்த பதவியை கொடுத்தவர்களுக்கு நீங்கள் செய்யும் அவமரியாதை.

இதனை புரிந்து கொண்டால் நாம் வாழ்க்கையில், நம் பதவியில், நம் தொழிலில் குப்பையாக இருக்காமல், பறவையாக இருக்க வேண்டும் என்று எண்ண தோன்றும். தொடர்ந்து வெற்றியில் பறக்க தோன்றும்.

எனவே ஒருபோதும் குப்பையாக இருக்காதீர்கள், பறவையாக உங்கள் திறமையால் தொடர்ந்து ஆகாயத்தை நோக்கி பறந்து செல்லுங்கள். வெற்றிகள் என்றும் உங்களுக்கே.

—

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர் மற்றும் உளவியல் ஆலோசகர்.
மன்னார்குடி.

---

# தனிமை

நினைவின் அலைக்கழிப்பில்
அங்கும் இங்குமாய் நடந்து போன
நாட்களை நெம்புகோலால் கிளரி
வெறிச்சோடி கிடக்கும் இந்நொடிப்
பொழுதில்
மறுபடியும் கட்டவிழ்கிறது குரூரமான
ஓர் அகதியின் தனிமை....

வேர்களை வளரவிட்டு
கூர் முனைக் குத்தூசியால் தோலுரித்து
நிர்வாணமாக்கப் பட்ட மரத்தின்
ரணத்தை இப்போது நுகர்கிறது
நெஞ்சு...

எடுப்பிலேயே எக்காலமிடும்
ஆலாபனை கூட
அறிவுரைகளாகிப் போனது..

புரிதலற்றவனின்
அன்பும்
புரிந்து கொண்டவரின்
அவதானிப்பும்
இம்சிக்கும் பொழுதுகளில்
பிரசவிக்கிறேன்
நீயும் நானும் ஒரே ஆடையை உடுத்திக் கொண்ட
அத்தனிமையின் தகிப்பை....

—

இளங்கவி
நடுநாட்டுத்தமிழன்,
முதுகலைப் பட்டதாரி,
குடியநல்லூர்.

# அம்மா - அவளன்றி உன்னில் ஓர் அணுவுமில்லை

ஆயிரம் கவிகள் கவிதைகளைத்
தொடுத்தாலும்
வார்த்தைகளில் உன்னன்பை அளக்க
இயலாதம்மா!

அன்பினுக்கோர் இலக்கணம் வகுத்தால்
உன்னடிசேர்ந்திடுமம்மா!
பூமியிலே நான் பிறக்க மறுபிறவி நீ
எடுத்தாயம்மா!

உனக்கென இருந்தயாவினையும்
எமக்கெனமாற்றினாய் அம்மா!
ஈன்றெடுத்த நாள்முதல்
என்னையுன்லோகமாய்
எண்ணினாயம்மா!

யாதிலும் யாவையிலும் என்னை
முதலாய் பார்த்தாயே
அதற்கென்ன நானென்ன செய்தேனோ
இனியென்னசெய்குவேனோ அம்மா!

சின்ன நிலவினை நான் வரைந்தாலும்
சந்திரனில் நானோ கால் பதித்ததற் போல
பெருமைமிகுமம்மா!

என் ஒவ்வொரு அசைவினையும் நீர்
ரசித்து சிரித்து மகிழ்ந்தென்னை
வளர்த்தாயே என்தாயே!

என்றும் சிறுப்பிள்ளையாய் உன்
அன்பினை பெருவேனம்மா!
மனிதவேடம் பூண்ட தாய்மார்களைத்
தவிக்க விடும் வளர்ந்தவர்களே
வாழ்க்கையை திரும்பிப் பாருங்கள்
உண்மையை உணருங்கள்
அவளன்றி உன்னில் ஓர்
அணுவுமில்லை!!!

—

இரா. ரம்யபாரதி,
புதுச்சேரி.

# தொலைவு பொருட்டல்ல...

ஏறியதும் இறங்கியதும்
கனக்காத மெட்ரோ
எதிரெதிர் அமர்ந்தவர்கள்
கணநேர உறவினர்களாக
வேகத்தில் பறக்கும்
இரயில்பூச்சியின்
வயிற்றுக்குள் நாங்கள்...

தொலைவை ஒரு
பொருட்டாக காட்டாத
சுரங்கப்பாதையிலிருந்து
மீள்கையில் வீட்டிற்கான தூரத்தினை
பல்லிளித்துக் காட்டுகிறது
சுளீர் வெயிலோ
பயமுறுத்தும் இரவோ!

—

ரகுநாத் வ,
மதுரை.

# அதையும் சேர்த்துக் கொண்டால்...

நேற்றைய நிஜங்கள்
இன்றைய நினைவுகள்

இன்றைய நிஜங்கள்
நாளைய நினைவுகள்

நாளைய நினைவுகளுக்கு
மூளைய ஞாபகசெல்களில்
சேமிக்கும் பொழுதினில்..

சம்பவங்களை
மட்டுமில்லாமால்
அந்த கணத்தின்
உள்ளத்து உணர்வுகளையும்
சேர்த்துக்கொண்டால்...

பின்னர்
அது பற்றி
யோசித்து மகிழ்வோ இல்லை
ஏற்பட்ட மனப்பக்குவத்தை
அறியவோ
முடியும் தானே?

-----------

## அந்த வார்த்தைகளுக்கு பின்னால்

அன்று அவர்
பேசிய பேச்சு
ஏற்புடையது இல்லை

சொன்ன விஷயம்
சரியில்லை

சொல்வதையும்
புரிந்து கொள்ளும் திறன்
இல்லை

குழுவாய் இருக்கும்
பொழுதினில்
நடந்து கொண்டதும்
தவறு

என்று மூன்றாம் மனிதரைப்பற்றி
நீண்ட குற்றப்பத்திரிகை
வாசித்து விட்டு

இறுதியாய்
உங்களுக்கு தெரியாதது
ஒன்னுமில்லை
என சொன்னால்

அதற்குப்பின்னால்
நான் சொல்வதற்கு
அப்படியே
ஒப்புதல் கொடுக்க வேண்டும்
என்பது தான்

-----------

## முன்னரிலிருந்து...

அந்த செயலுக்கு
பாராட்டு கிடைத்தது

அன்றைய பேச்சு
வரவேற்கப்பட்டது

அந்த நாளில்
உறவுகளின்
தோழமைகளின்
சந்திப்பு
சந்தோஷம் கொடுத்தது

அன்றைய
சுற்றுலா
உற்சாகம்
கொடுத்தது

அன்றைய
தோல்வி
அவமானம்
கொடுத்தது

அன்றைய
காலதாமதத்தால்
வசை மொழி
கிடைத்தது

அன்று
திரும்ப திரும்ப
முயற்சித்தும்
சரி வர அமையமால்
நம்பிக்கை இழப்பு
ஏற்பட்டது

இப்படியாய்
இந்த கணத்துக்கு
மன நிலைக்கு ஏற்ப
பழையன பற்றிய
யோசிப்புகள்

-----------

## அந்த ஒன்றிலிருந்து...

எதிர்பார்த்தது
நடக்கையில்

மகிழ்வு
அடுத்ததும் முடியும்
என நம்பிக்கை
நிறைய சாதிக்கணும்
என இலட்சிய கனவுகள்
வெற்றிச்சமன்பாடு
மனப்பாடமாய்

எதிர்மறையானால்
சோகம்
நமக்கு பத்தாதோ
என பயம்
இப்படியே தொடருமா
என கலக்கம்
இனி என்ன செய்வது
என புலம்பல்

-----------

## இவைகளும் தான்...

சுற்றி நடப்பவைகளை
கவனித்தல்

செவி வழி
செய்திகள்

பேசப்படுவைகளை
கவனித்தல்

வாசிப்பவைகளை

யோசித்தல்

பார்ப்பவைகளை
உள்வாங்குதல்

இவைகளும்
தனித்துவத்தை
மேம்படுத்த உதவி
செய்பவை தான்

பாராட்டில்
கிடைக்கும்
நம்பிக்கை
தன்முனைப்பு தாண்டி

-----------

## அப்பப்பா...

எதிர்பார்ப்பில்
அது கிடைக்கும்
கிடைத்தால்
அதற்கும் மேலே

வெற்றியில்
பாராட்டு
சந்தோஷம்
நம்பிக்கை
மனம் வானில் பறத்தல்

தோல்வியில்
சோகம்
நம்பிக்கை இழப்பு
பயம்
பதட்டம்

முடிவுக்கான
தேடலில்
தயக்கம்
குழப்பம்
முடியும் என்ற
தெளிவு

அப்பப்பா
ஒரு நிகழ்வில் தான்
எத்தனை எத்தனை
உணர்வுகள்

-----------

## மௌனத்துக்குப் பின்னால்

இன்னும்
நல்லா பதில்
சொல்லியிருக்கலாம்

இன்னும்
யோசித்த பின்
செயல்பட்டிருக்கலாம்

நேற்று மாதிரி
இன்றும்
இருந்தால்
நன்றாக இருக்கும்

இந்த வேலையை
எப்படியாவது
முடிக்க வேண்டும்

இது சுத்தமாய்
புரிய வில்லை
யாரிடமாவது
உதவி கேட்க வேண்டும்

நாளை
என்னவாகப்போகிறதோ

அவர்
நல்ல பேசறார் இல்லே

இந்த பொழுது போக்கு
உற்சாகம் கொடுத்தது

எல்லோருக்கும்
கோபம் வரும் தான்
அதுக்காக இப்படியா

இன்றாவது
அவர் நடவடிக்கையில்
மாற்றம் வருமா

என்று
ஏதோ ஒன்று பற்றி
உள்ளுக்குள்
பேச்சு

மௌனமாவது
வாய் மட்டுமே...

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை,
கைபேசி: **9994920236**

---

# தொடர்வண்டி குமுறல்

மகனுக்கு தேடித் தேடி வாங்கிய
பொம்மைகள்,
அம்மா விரும்பி கேட்ட
புடவை,

நீண்ட நாட்களாய் மனைவி
ஆசைப்பட்ட தங்க கம்மல்,
அக்காவுக்கும் தங்கைக்கும் ஒரே நிறத்தில்
வாங்கிய சுடிதார்,

சிறப்பாய் பணி புரிந்ததற்காக கம்பெனி
கொடுத்த விருதென எல்லாம்
சிதறிக்கிடக்கிறது...

எப்படி பதில் சொல்லும்
ஊரிலிருந்து
நூறு முறையைத் தாண்டி
வந்துகொண்டிருக்கும் அலைபேசியின்
அழைப்புக்கு பதிலாய்,

இரயில் விபத்தில் சிதறிக்கிடக்கும்
உடலைப் பார்த்து
கதறி அழும் மனது!

—

முு. முபாரக்,
திருச்சி.



# அகரம் இப்போ சிகரம் ஆச்சு

## (பாடல் ஒரு பார்வை)

எப்போது கேட்டாலும் இப்போது கேட்கிற மாதிரியே இருக்கும் உள்ளுணர்வை உணர்ந்ததால் எழுதுகிறேன்.

பாடலின் உள்ளே வாழ்வின் விரிசல்கள் ஒட்டப்படும். மனம் கசந்து கிடக்கையில்... வானம் நெருங்கி வந்து முத்தமிடுவது போல... இந்தப் பாடல். உடல் வெதும்பி கிடக்கையில்... கடல் சூழ்ந்த காற்றில் கவிதை வார்க்கும் இந்தப் பாடல். இதயம் வலிக்க... மருந்து தான் இந்தப் பாடல். கண்களின் ஈரத்தில் உறவுகளை உற்று நோக்குதல் தான் இந்தப் பாடல்.

"சிகரம்" படத்தின் எல்லா பாடல்களுமே சிகரம் தான் என்றாலும்... இந்த பாடல் சிகரத்தில் அமர்ந்திருக்கும் போதி என்று தான் சொல்ல வேண்டும். இசை SPB என்பது கூடுதல் நம்பிக்கை. கூடட்டும் தன்னம்பிக்கை... என்பது தான் இந்த முறை கேட்கையிலும். உயிர் உருகி கசிவதை உணர முடியும். உள்ளம் கரைந்து ஓடுவதை உளறுகிறேன்.

"அகரம் இப்போ சிகரம் ஆச்சு
தகரம் இப்போ தங்கம் ஆச்சு...
காட்டு மூங்கில் பாட்டு பாடும் புல்லாங்குழல் ஆச்சு"

காட்சிப்படி கோரஸ் பாடிக்கொண்டிருக்கும் சார்லிக்கு கிடைத்திருக்கும் தனி பாடல் இது. படத்தில் முக்கிய பாத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் வாழ்வின் மீதான நம்பிக்கை கூடும் இடமாக இருக்க கையாண்ட திரை நுட்பமாக தான் இந்தப் பாடலை பார்க்கிறேன். "காட்டு மூங்கில் பாட்டு பாடும் புல்லாங்குழல் ஆச்சு" வரியில் உள்ளாங்குழலில் உயிர் உருளுவதை உணர முடியும். எப்போதுமே புல்லாங்குழல் மீது நம்மை அறியாத பிணைப்பு உண்டு. அந்த வார்த்தை எதனோடு சேர்ந்தாலும் இசை வந்து இறங்கி விடுவதை நினைத்தாலே இனிக்கிறது. காட்டு மூங்கில் வார்த்தையில் ஒரு அட்சய பாத்திரம் மினுங்குவதை உணரலாம். அதன் வழியே வாழ்தலின் இசையை மூச்சாக்கும் வித்தையை அருகலாம்.

"சங்கீதமே சந்நிதி... சந்தோசம் சொல்லும் சங்கதி
சங்கீதமே சந்நிதி... சந்தோசம் சொல்லும் சங்கதி...

என்று ஏறி இறங்குகையில்... தோல்வி தோளில் இருந்து இறங்கி வெற்றி கண்களில் ஏறும். இதயம் சுமந்த பாறையில் நீர் கசிந்து பூ பூக்கும்.

"கார்காலம் வந்தால் என்ன
கடும் கோடை வந்தால் என்ன
மழை வெள்ளம் போகும்
கரை ரெண்டும் வாழும்

காலங்கள் போனால் என்ன
கோலங்கள் போனால் என்ன
பொய் அன்பு போகும்
மெய் அன்பு வாழும்"



**மா. நிரல்யா,**
**சிங்கப்பூர்.**

மழைக்காலமோ வெயில் காலமோ...
மழை வெள்ளம் அடித்துக் கொண்டு
போகையிலும் இரு பக்கமிருக்கும் கரை....
வாழத்தானே செய்கிறது. எதிர்மறை சம்பவங்களின் வழியாகவும் நேர்மறை சிந்தனையை ஊற்றெடுக்க கற்று கொள் என்று தானே சொல்கிறது. காலமும் கோலமும் போய்க்கொண்டே இருக்கும். அழிந்து கொண்டே கூட இருக்கும். ஆனால் பொய் தாண்டி மெய்யாய் வாழ்வது அன்பின் ஆகிருதி. அதன் அடியில் தான் பூமி சுழலுகிறது. அதன் ஆடையில் தான் மானுட நிர்வாணங்கள் மறைக்கப்பட்டன. அன்பின் தேவை தான் எலும்பு ரத்தம் நரம்பு தசை.... கூடிய தேகமாய் இருக்கிறது. மெட்டில் மொட்டு விடுவது போல... மொட்டில் பூக்கள் தளிர்ப்பது போல... போகிற போக்கில் இதயத்தில் இசை வளர்ந்து போகும் ஜேசுதாஸின் குரல்... குரலா அது... குணம்.

"அன்புக்கு உருவம் இல்லை
பாசத்தில் பருவம் இல்லை
வானோடு முடிவும் இல்லை
வாழ்வோடு விடையும் இல்லை"

அன்புக்கு ஏது உருவம்... அது ஓர் அரூபம். எங்கிருந்து எங்கும் நீளும். எங்கிருந்து எங்கும் தாவும். ஒரு மழை தேசத்துக்கும் ஒரு வெயில் தேசத்துக்கும் இடையே காலத்துக்குமான பாலமாய் அமையும். அது ஒப்புக்கொடுத்தலின் வழியே நிகழும் பிரார்த்தனை. பாசத்துக்கு வயது ஏது. வயது எண்களில் இருக்க... பருவம் கண்களில் இருக்கிறது. வானுக்கு முடிவு இல்லை... அதை தான் குறியீடாக சொல்கிறது இந்த வாழ்வுக்கும் விடையில்லை என்பது. விடை தேட தான் வாழ்கிறோம். ஆனால்... விடை தராத வாழ்வு தான் இந்த வானுக்கு கீழே வாய்த்திருக்கிறது. வானோடு முடிவும் இல்லை என்று அறிவேறி... அறிவியலை ஆராய்ந்து... பின் அப்படியே பணிந்து... வாழ்வோடு விடையும் இல்லை என்று மெய்ஞானத்தை மலர்த்தி காட்டுதல் தான் இலக்கியம்.

"இன்றென்பது உண்மையே
நம்பிக்கை உங்கள் கையிலே"

இனிப்பு தூக்கிக் கொண்டு ஊரும் எறும்பு கூட்டத்தை ரசித்து பார்ப்பது போன்ற பிரமிப்பு. ஒரு நீண்ட நெடிய தவத்தின் பின்னிருக்கும் வரம் போல... கேட்க ஆரம்பிக்கையில் இருந்த நாம் கேட்டு முடித்த பிறகு வேறொரு நாம் ஆக மாறி இருப்போம். இன்றென்பது உண்மையே... நம்பிக்கை உங்கள் கையிலே.

"தண்ணீரில் மீன்கள் வாழும்
கண்ணீரில் காதல் வாழும்
ஊடல்கள் எல்லாம் தேடல்கள்தானே

பசியாற பார்வை போதும்
பரிமாற வார்த்தை போதும்
கண்ணீரில் பாதி காயங்கள் ஆறும்"

கண்ணீர் இன்றி காதல் ஏது. சும்மா சண்டை போடுவதே சதா கட்டிக்கொள்ள தானே. ஊடல்களின் வழியே ஒருவரையொருவர் தேடுவது தானே காதலின் சூட்சுமம். நீரை வெறுக்காத மீன்கள் போல கண்ணீரை துறக்காத காதலே ஜெயம். காதலின் வலி காலத்தின் வழியே கடந்து விடாத கருப்பொருள். அது ஒரு பெரும்பாறையில் அவ்வப்போது ஒரு செடி ஒரு பூ ஒரு இலை என நினைவில் வாழும். பார்த்தால் பசி தீரும். பரிமாற சொற்கள் போதும். மௌனங்கள் கூட மடி சாய்ந்தால் முளைத்து விடும். அழுது தீர்க்கையில் தான் ஆகாயம் தெளிவாகிறது. அன்பும் அப்படியே. தழுவி தீர்கையில் கண்ணீர் பூச்செறிகிறது. காயங்கள் ஆற்றும் மாயங்கள் அன்பை அன்றி வேறென்ன.

"தலை சாய்க்க இடமா இல்லை
தலை கோத விரலா இல்லை
இளங்காற்று வரவா இல்லை
இளைப்பாறு பரவா இல்லை"

தனித்துவம் இங்கு தான் தெறிக்கிறது. வைரமுத்து எனும் வாள்.... சீவி செல்லும் இதயத்தில் யுத்தமில்லை. முத்தம்.

தலை சாய்க்க இடமா இல்லை... தலை கோத விரலா இல்லை இளங்காற்று வரவா இல்லை... இளைப்பாறு பரவா இல்லை. தவித்தது போதும். தாகத்தை தணிக்க கொஞ்சம் தலை சாய். இடம் இருக்கிறது. சாய்த்த தலையை கோதி விட விரல்கள் இல்லாமலா

போகும். அமிழ்ந்து ஒடிந்து ஒதுங்கி விடாதே. இளங்காற்று வரும். இசையோடு வரும். இளைப்பாறு இதயமே.

ஆறுதல் படுத்தி... சாந்தப்படுத்தி.... தட்டி கொடுத்து.... பிறகு இன்னும் ஒரு வரி மானுட இமயத்தில் இருந்து எடுத்து வந்து உள்ளங்கை விரித்து ஒரு சிலுவையை போல தாங்குகிறது.

எறும்புக்கும் வாழ்க்கை இருக்கு தானே. துளி உணவை பெரும்பாறையாக தூக்கி போகும் எறும்புக்கு இல்லாத பிரச்சனையா. வாசல்... கடந்தால் தான் உண்டு... வாழ்க்கை. ஆயினும் கடக்கிறதே... அந்த நம்பிக்கையே நல்லது. அன்பு கொண்டு நம்பு மனிதா. நம்பிக்கை அன்புள்ள மனதில் தான் ஆழமாய் வேர் விடும்.

"நம்பிக்கையே நல்லது...
எறும்புக்கும் வாழ்க்கை உள்ளது..."

--
கவிஜி.

---

# கண்ணீர்முட்கள்

ஊமையாய் நகரும் கடிகார முட்கள்
சுமையான மௌனவலிகளில்
கண்ணீர்முட்கள்

உருவெடுக்கும்
பல நினைவுகள்

பூ பூக்கும்
சில நினைவுகள்

ரணமாகும்
வரமாகும் ;
உரமாகும்;

ஞாபகங்கள் உயிரூட்டும்
காயங்கள் உரமூட்டும்
காலங்கள் கடந்திருக்கும்
பருவங்கள் படமெடுக்கும்
துருவங்கள் அலைமோதும்...

—

மதீரா,
அறிவிப்பாளினி,
இலங்கை.

# உயிர்வெளவல் - புத்தக வாசிப்பு அனுபவம்

படைப்பு பதிப்பகம்
ஆசிரியர்: ரகுநாத் வ


பல்வேறு சிறு, பெரிய தமிழ் இலக்கிய இதழ்களில் தொடர்ந்து பல்வேறு காவியக் கவிதைகளை எழுதிக் கொண்டிருக்கும் நன்கு அறியப்பட்ட ரகுநாத் வ அவர்களின் முதல் கவிதைத் தொகுப்பு "உயிர்வெளவல்" வாசிக்கும் அரிய வாய்ப்பு கிடைத்தது.

கவிஞர்களில் இரண்டு வகை கவிதை தொகுப்பின் மூலமாய் அறியப்படுபவர்கள் மற்றும் இதழ்களில் எழுதி, பின்பு தொகுப்பாய் வெளியிடுபவர்கள் கவிஞர் ரகுநாத் அவர்கள் இதில் இரண்டாம் வகை.

இவரது கவிதைகளை தொடர்ந்து வாசித்துக் கொண்டிருக்கிறேன் இந்த தொகுப்பிலும் இயற்கை, தவிப்பு இயக்கம், இயற்கை குழந்தைகள், வாழ்க்கை, ஏமாற்றம், கடல், காதல் என இவரின் கவிதை வட்டம் விரிந்துக் கொண்டிருக்கிறது.

இந்த குறுங்கவிதைகளின் தொகுப்பு நமக்கு கொடுப்பதோ, பெரியக் கற்பனை கலந்த கவிதை வானம்.

கோடிட்டு காட்ட வேண்டியது இல்லை அத்தனை கவிதைகளும் அருமையே.




சொட்டாங்கல், டெடி பியர், அரை டிக்கெட், காதில்லாத பொம்மை, வேக வைத்த செங்கல், பாட்டியின் பழக்கடையில் பழைய சூரியன், அவள் கன்னத்தில் கொடுத்த அழியா சொத்து போன்ற அத்தனைக் கவிதைகளும் நெஞ்சில் நின்று ஆடுகிறது,

ஒரு கலைஞனால் ரசிக்க வைக்க முடியும் ஆனால் ஒரு கவிஞனால் மட்டுமே மரணித்துப் போன காலத்தை மறுபடியும் ரட்சிக்க முடியுமென நிருபித்திருக்கிறார் கவிஞர் ரகுநாத் வ அவர்கள்.

வாழ்த்துக்கள், இன்னும் கவிதை உலகம் உங்களுக்கு முன் திறந்துதான் வைக்கப்பட்டிருக்கிறது, காலத்தால் அழியாதக் கவிதை காவியங்களை தொடர்ந்து அரங்கேற்றுங்கள்.

கவிதை மீது காதல் கொண்ட அனைவரும் வாங்கி வாசிக்க வேண்டிய நூல் "உயிர்வெளவல்".

நூல் வாங்க +91 97875 22311

—

நன்றியுடன்,
இரா. மதிராஜ்.

# தீராக்காதல்

காதல் கவிதை எழுத
நான் விழைவதே இல்லை
ஏனெனில்
ஏக்கமோ, எரிச்சலோ தான்
ஒன்றைப் பற்றி என்னை
எழுத வைக்கிறது
இப்போது நான் எழுவது
ஏக்கமோ எரிச்சலோ
இல்லை என்னவனின்
தீராதக்காதல்
திகட்டிவிடாமல் இருக்க
எச்சரிக்கையாய் எழுதி தீர்க்க
வந்திருக்கிறேன்.

அவன் காதலில்
சமரசம் செய்வதேயில்லை
மோதலிலும் தான்
கொஞ்ச தவறியதுமில்லை
கெஞ்ச மறுப்பதுமில்லை
மஞ்சம் மறப்பதுமில்லை
முத்தங்களை அவன்
எண்ணுவதேயில்லை
என்னைத் தவிர வேறு
எண்ணமேயில்லை,

பெண்ணுக்குரிய இலக்கணமெல்லாம்
வேண்டாம் பிடித்தது போல்
இரு என்கிறான். கணவனுக்கு
சாப்பாடு பறிமாறிவிட்டு நீ சாப்பிடு
என்று சம்பிரதாயம் சொன்னவர்களிடம்
எப்பவும் நாங்க ஒன்னாதான்
சாப்பிடுவோம் என
சம உரிமைக்கு ஒற்றை வரியில் விளக்கம்
கொடுக்கிறான்.

உடல்நிலை சரியில்லை என்றால்
உயிரையே விடுகிறான்
எவ்வளவு அன்பை பொழிந்தாலும்
ஏற்றுக்கொண்டு கடைசியில்
என் அம்மாவைப்போல்
வராதென்கிறான்
நான் மறந்துவிட்ட ஆசைகளையும்
நிறைவேற்றுகிறான்.
மகளைப் பார்த்தவுடன்
என்னையே கொஞ்சம் மறந்துவிடுகிறான்.
கட்டித்தழுவ குட்டிப்பிள்ளைகள்
வந்தபோதும் என் மீதான காதலை
கொட்டி தீர்க்கிறான்.

எல்லையில்லா பேரன்பினால்
எண்ணங்கள் எக்கச்சக்கமாகி அவனின்
செயல்களால் அன்றாடம் நிரம்பி வழியும்
காதலை
சொல்லித்தீர்க்க முடியாமல்
மூச்சுமுட்டுகிறது
ஆம்
முடிவிலாக் காதலது மொழிப்பெயர்க்க
முடியாது.

—

*G. சூர்யகலா சரவணன், B.E,*
கண்டிதம்பேட்டை, மன்னார்குடி.



# அவளில்லாத கனவு

நிசப்தம் நிரம்பிய
நீளிரவின் நடுநிசிப் பொழுதில்
எனக்குத் தெரியாதபடி
விம்மிக் கொண்டிருக்கிறது
கனவு.

வண்ணங்கள்
பூத்துக் குலுங்கும்
அக்கனவில் மேலும்
வண்ணங்களைக் கூட்டிக்
கொண்டிருக்கிறது
மலர்வனமும்
வண்ணத்துப்பூச்சிகளும்.

நொடிக்கு நொடி
மலருக்கு மலர் மாறி மாறி
அமர்ந்தாலும்
ஒரு மலரை மட்டுமே
தன் சுகத்துக்கென
கொண்டிருக்கிறது
அந்த வண்ணத்துப்பூச்சிகள்.

ஒருவரும்
நுழைய முடியாத
அப்பெருங்கனவில்
வண்ணத்துப்பூச்சிகளின்
சேட்டைகளை ரசித்து சுகமுடன்
ஏற்றுக் கொள்கிறேன்.

என்னை ஆற்றுப் படுத்த
அவள் உடனில்லாததைத் தவிர
என் கனவின்
விசும்பலுக்கான காரணம்
வேறென்னவாக இருக்கக்கூடும்!

--------

## காலத்தின் கட்டாயம் கருதி...

நானாக விழுந்ததில்லை
தடுக்கி விழவிட்டவர்கள்
என்னைத் தூக்கி விடுவதுமில்லை.

என் உப்பைத் தின்றவர்களே
கைகொட்டிச் சிரிக்கிறார்கள்.
நானே சுதாரித்து
மெதுவாய் எழுகிறேன்.

நான் எழுந்ததும்
சுற்றும் முற்றும் தேடுகிறார்கள்.
கிடைத்ததை வாரிச்
சுருட்டிக்கொண்டு ஓடுவதற்கு.

நான் ஏமாளியாய்
இருந்தவரை கொழுத்த லாபம்
பார்த்தவர்கள் அவர்கள்.
தெளிந்து விட்டேன்
காலத்தின் கட்டாயம் கருதி.

இப்போதெல்லாம்
நான் விழுவதுமில்லை
கைகொட்டி
யாரும் சிரிப்பதுமில்லை.

—

கவிதைகள் ஆக்கம்,
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602.
கைப்பேசி: 9443139353



# எண்ணங்கள்

உடைந்தும் நைந்தும் போய்
பிய்த்து எடுத்த துண்டுகளாய்
சிறு சிறு உரசல்களோடு
இன்னமும் கொஞ்சம்
கொஞ்சமாய் பேசத்தான்
செய்கிறது தூரமாய் போன
எண்ண அலைகள்...!

சிற்சிறு வட்டங்களில்
சிற்சிலவாய் கோடிட்டு
குரலசைவில் கையுயர்த்தி
முழக்கமிட்டு நகர்ந்துகொள்கிறார்கள்

நம் எண்ணங்களில்
புதையுண்ட விதைகளை
குத்திட்டுப் பார்த்தாலும்
முளைத்த பாடில்லை...!
விதைகளுக்கு நீரூற்றுமுன்
நஞ்சை பிசைந்து தடவிக்
கொள்கிறார்கள் வேடதாரிகள்..!

அரை வயிற்றில்
நிரப்பிய உணவை
முழுவயிற்றில் நிரப்ப நினைத்தாலும்
கால்வயிற்றில் நிரப்பிவிட்டு
கால்கடுக்க காத்திருக்கச்
செய்கிறார்கள் காலக்கூத்தர்கள்..!

நிம்மதியை சுமக்க
நினைக்கும்போதெல்லாம்
நினைவலைகளில்
தூக்கிச்செல்கிறது
நிஜவாழ்க்கையின்
அஸ்திவாரங்களை....!

வாழ்வின் கோணங்களை
வரைந்து பார்த்தால்
தாள்களின் பக்கங்களெல்லாம்
கிழிந்து தொங்குகின்றன
அறுந்துபோன கயிற்றின்
முனைகள் சேர்கின்றன
பல்வேறு முடிச்சுகளாய் ..!

ஓய்வில்லா அலையாய்
மனக்கூட்டிற்குள்
அடித்துக்கொள்ளும்
அலைகளும் கூட கரை தொட
பாய்ந்து ஓடுகிறது....!

சிக்கலின் பிண்ணணியில்
சிதைந்து போன சறுக்கலாய்
உதைத்து உதைத்து
பார்த்தாலும் மீண்டும் மீண்டும்
சுவற்றில் அடித்த பந்தாய்
நம்மை நோக்கியே பாய்கிறது

எண்ணங்களின் வடிவங்களாய்
மாறுங்கள் நம் வாழ்வில்
நம்மை தொடும்போதெல்லாம்
நல்லனவாய் முளைத்திடுங்கள்
விதைகளை தேடவேண்டாம்
விதையாய் மாறுங்கள்
விருட்சங்கள் நம்மோடு...!

--------

## துளிப்பாக்கள்

சிதறிக்கிடக்கிறதே
துண்டு துண்டுகளாய்
அடடே ! மரநிழலில் வெயில்...

காற்றோட்ட வகுப்பறை
கிளை வருடிய சன்னல்
நீரூற்றும் மாணவர்கள்

சத்தமில்லாத வகுப்பறையும்
சுத்தம் செய்யப்படுகிறது
பள்ளி திறக்கப்படுகிறதோ?

அழுகை குரலும்
ஆனந்தமாய் சிரிக்கிறதே
பள்ளிசெல்லும் குழந்தை

ஆறுவயது குழந்தையுடன்
ஆறுமாதகுழந்தையும்கற்கிறதே
பாடம்கற்பிக்கும் கர்ப்பிணி தாய்

பாதச்சூட்டோடு
மனச்சூட்டையும் கவனிக்கிறது
பின்தொடரும் நிழல்

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

# உன்னால் முடியும்!

காற்றின் பலத்தில் உயிர்கள் நீளுதே..
உழைப்பின் பலத்தில் உலகம் வாழுதே..

வறண்ட பூமி மழையால் செழிக்குதே..
வறுமை நிலையை உழைப்பே
ஒழிக்குதே..

தனி மனிதன் மாற்றம் போதுமே..
இனி உலகம் தானாய் மாறுமே..

தோல்விக் கண்டு பயம் எதற்கு?
முயற்சியைத் தொடரு ஜெயம் உனக்கு..

கடவுளும் நேரில் வருவதில்லை..
கடமையை விடவும் சிறந்ததில்லை..

துணிந்தவன் எதிலும் தோற்றதில்லை...
பயந்தவன் எதிலும் வென்றதில்லை...

வார்த்தை அழகில் மயங்காதே...
வாழ்வை நினைத்து கலங்காதே...

சுற்றும் பூமியும் சுற்றட்டுமே...
சுயநலம் எல்லாம் சூழட்டுமே...

தடைகளை அறிந்தே தகர்த்து விடு..
தரணியில் உனக்கெனத் தடத்தை இடு..

தனித்துவம் தானே தலை நிமிரும்..
காலம் அதனை வழி நடத்தும்..

பிறவியின் பொருளினை அறிந்து விடு..
சிறகுகள் இன்றியே வானைத் தொடு..

யாவும் உன்னைத் தேடி வரும்..
உலகம் உன்னால் பலம் பெறுமே..



—

வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை),
திண்டுக்கல்.

# ஆகச்சிறந்த நல்லவன்

எல்லோரிடமும் ஏமாந்தான்
ஏமாற்றியவர்கள் எல்லாம்
அவனுக்கு கொடுத்தப் பட்டம்
பிழைக்கத் தெரியாதவன்

எல்லோரையும் நேசித்தான்
எல்லோரின் நலனுக்காக
வேண்டிய அவனுக்கு
கொடுத்தப் பட்டம்
பைத்தியக்காரன்

பிறரை ஏமாற்றி வாழ்பவன்
உழைக்கத் தெரிந்தவனுக்கு
கொடுத்தப் பட்டம்
உருப்படாதவன்

தன்னைப் போல இல்லாதவனை
தன்னைவிட தாழ்த்திடும்
முனையும் வீணர்கள்
தங்களுக்கு கொடுத்து கொள்ளும்
பட்டம் இதுதான்
ஆகச்சிறந்த நல்லவன்

--

செ. இலட்சுமணக்குமார்,
ஈரோடு.

---

# பரஞ்சோதி

ஆண்பிள்ளையைப்
பெண்பிள்ளையாக்கி
அழகு பார்க்கும் அம்மாக்கள்

என்னைப் பெண்ணாக்கி
அவள் தந்த முத்தங்கள்
வேறு வகைமாதிரி

இப்போதெல்லாம்
கனகாம்பரக் கூந்தல்கள்
அருகி விட்டன
எல்லாம் மல்லிகைக் கிழமைகள் தான்
அது முல்லையா
பிச்சியா
மல்லிகையா
தெரியவில்லை

ஆண்பிள்ளையைப்
பெண்பிள்ளையாக்கி
அழகு பார்க்கும் அம்மாக்கள்
வீரம் குறைந்து போகுமென
கொலுசையும்
வளையல்களையும்
ஆண்பிள்ளையிடமிருந்து
களையச் சொல்லி
அழிச்சாட்டியம் செய்யும் பாட்டிகள்

அம்மாவைப் போல ஒரு அக்காள்
அம்மாவைப் போல ஒரு மனையாள்
அம்மாவைப் போல ஒரு மகள்
எல்லாம் ஒரு ஆணுக்கு வேண்டும்
அம்மாவைப் போலவே தான்

அம்மாவை மகளாகப் பாவிப்பது

தொலைவாக வேறொரு
பால்வீதியில் இருந்து கொண்டு
சூரியனைச் சின்னதொரு
நட்சத்திரமாக காண்பது

எது எப்படியோ
எப்போதும் அவள் முகம்

ஆயிரம் கோடி
சூரியன் கூடி
செய்த ஒற்றைச் சோதி.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்

# வெளிநாட்டு வாழ்க்கை

அரவணைப்பில்லாமல்
ஆறுதலில்லாமல்
உறக்கமில்லாமல்
ஓய்வில்லாமல்

உடல் நலமில்லாமல்
சரியான உணவில்லாமல்
உற்ற துணையில்லாமல்
அன்பு செலுத்த ஆளில்லாமல்

சாய்ந்து கொள்ள நட்பில்லாமல்
நினைத்த நேரத்தில் ஓடவரமுடியாமல்

சொந்த மண்ணின் வாசமில்லாமல்
கண்ணீர் துளிகளை காட்டமுடியாமல்

செல்லியழ யாருமில்லாமல்
நரகத்தின் காவலனாய்
நாட்களை நகர்த்தி
இங்கே நான் உழைத்து களைத்து
சம்பாதிப்பதெல்லாம்

என் குடும்பம் அங்கே யார்முன்னேயும்
எதற்காகவும் தலைகுனியவோ
கையேந்தவோ கூடாது என்பதற்காக
தான்

--

செந்தில்குமார் ராஜேந்திரன்.

# துளிப்பாக்கள்

ஓரங்குலம் நீண்டுள்ளது
நாட்டுப்புறப் பாடலைக் கேட்டு
வளரும் நாற்று

சுட்டெரிக்கும் வெயில்
வற்றிடவில்லை
வறுமையின் கண்ணீர்

வானவில்லை
தொட்டுப் பார்க்கிறது
வானுயர்ந்த மரம்

வீடெங்கும்
புது வாசம்
மழலையின் வரவு

மேகத்திற்கு அப்பாலுள்ள அமைதியை
கொண்டு வந்துவிடுகிறது
இசை

ஒற்றை இறகு
புரட்சி செய்கிறது
கூண்டுக்குள் பறவைகள்

இரவுக்குடையில்
ஏகப்பட்ட பொத்தல்கள்
விண்மீன்கள்

ஒற்றுமையுடன் பறந்தன
அரசியல்வாதிகளின் கொடிகள்
தலைவர் சிலையருகே அணிவகுப்பு

----------

## ஓரங்குலம் நீண்டுள்ளது

நாட்டுப்புறப் பாடலைக் கேட்டு
வளரும் நாற்று

சுட்டெரிக்கும் வெயில்
வற்றிடவில்லை
வறுமையின் கண்ணீர்

வீடெங்கும்
புது வாசம்
மழலையின் வரவு

மேகத்திற்கு அப்பாலுள்ள அமைதியை
கொண்டு வந்துவிடுகிறது
இசை

ஒற்றை இறகு
புரட்சி செய்கிறது
கூண்டுக்குள் பறவைகள்

ஒற்றுமையுடன் பறந்தன
அரசியல்வாதிகளின் கொடிகள்
தலைவர் சிலையருகே அணிவகுப்பு

மரங்களை வெட்டி விதவிதமாய்
கதவுகள் செய்கிறான்
வீடு அற்ற தச்சன்

தியானிக்கும் புத்தரின் மேல்
அர்ச்சனை செய்கிறன
கொட்டும் மலர்கள்

வற்றும் குளத்தில்
பெருந்திரள் கொண்டாட்டம்
மீன் பிடித்திருவிழா

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம் | 6380704001



# மங்கிலியம் (சிறுகதை)

கீழ் கதவில் தடுத்து நிறுத்திய பாதுகாப்பாளர்...." உங்கள மேல கூப்புடறாங்க..." என்றான் மூச்சிரைக்க.

எதுக்கு என்பது போல பார்த்த ரம்யா.... சற்று பின்னால் வந்து கொண்டிருந்த சத்யனை அர்த்தத்தோடு திரும்பி பார்த்தாள். அதற்குள் அவனும் வந்து சேர்ந்து கொண்டான்.

"செவப்பு நிற சுடிதார். கணவர் கண்ணாடி போட்ருப்பார்..."

அடையாளம் சரி தான். காதில் இருந்த அலைபேசியை இன்னும் கொஞ்சம் அழுந்த பிடித்தபடியே... "உங்களதாங்கம்மா.. மேல.... கோயில்ல கூப்புடறாங்க..." என்றான் அழுத்தமாக. மேலே போகாமல் வெளியே விட மாட்டான் போல... அப்படி ஒரு உடல் மொழி. பாவனை. கதவை மறித்துக் கொண்டு நின்றான்.

அவளுக்கு யோசனை நாலா பக்கமும் ஓடியது. நின்று யோசித்தபடியே பார்த்தாள். மனம் கணக்கு போட்டது. தலைக்குள் தகிப்பு ஏறியது. சத்யனை அர்த்தத்தோடு பார்த்தாள். அவனுக்குள்ளும் குளறுபடி யோசனை தான். இருவரும் மனதை பிசைந்து கொண்டு நின்றார்கள்.

"யம்மா.. உங்களத்தான்.. மேல கூப்பிடறாங்க..." எதிரே வருவோர் சிலர் செய்தி சொன்னார்கள். அவர்கள் கண்ணில் அடையாளம் சரி பார்த்துக் கொண்ட திருப்தி.

"அட கோயில்ல கூப்பிடறாங்க போல... என்னன்னு ஒரு எட்டு போயி பார்த்துட்டு போய்டுங்க...." என்றாள் கேட் ஓரத்தில் மாங்காய் விற்றுக் கொண்டிருந்த... சூழலை கவனித்துக் கொண்டிருந்த பெண்மணி.

எல்லாமே அனிச்சை போல நிகழ்ந்து கொண்டிருந்தது. அவள் யோசனையோடு மீண்டும் கோயில் நோக்கி மேலே நடந்தாள். மௌனமாய் சத்யனும் கூடவே நடந்தான். மருங்க விழித்த அவளுக்கு என்ன நடக்கிறது என்ற திக் திக் உணர்வு கூடிக் கொண்டே போனது. அவள் உடல் மொழியில் இருந்த பதற்றம்.. அவளை தானாகவே கோயில் நோக்கி இழுத்தது. அவள் கால்கள் மெல்ல நடக்க... அவள் மனம் வேகமாய் நடந்து முன்னால் போய்க்கொண்டிருந்தது.

பெருமூச்சு விட்டபடி.. தன்னையுமறியாமல் நடந்தாள். அவள் கண்களின் மேற்புறத்தில் வியர்வை பொங்கியது. ஒன்றும் பேசாமல் கூடவே நடந்தான் கணவன் சத்யன். இருவருக்குமே மூச்சு வாங்கியது. ஏழெட்டு நிமிட நடை என்றாலும்.. மலைக் குன்றில் நடுவில் இருக்கும் மலையூத்தம்மன்... காற்றாட நீரோடைக்குள் தன்னை பொதிந்து கொண்டு நம்பிக்கையின் அரணாய் அமர்ந்திருக்கிறாள்.

எதையும் யோசிக்க முடியவில்லை. மூச்சிரைக்க... முகம் இரைக்க மேலே ஏறி கோயில் வாசலுக்கு செல்லும் முன்பே பூசாரி.. உட்பட கோயில் நிர்வாகிகள்... சூழ்ந்து கொண்டார்கள்.

"முதல்ல தண்ணீ குடி.. ஒன்னும் பயப்பட வேண்டாம்.... நம்ம மலையூத்தம்மன்கிட்ட வந்துட்டு ஒரு கெடுதலும் நடக்காது...."என்றார் நிர்வாகிகளில் மூத்தவர்.

என்ன என்பது போல பார்த்தவளுக்கு உள்ளே பதற்றம். மூச்சு வாங்கியது. வேர்த்து கொட்டியது. சத்யனுக்குள்ளும் தடுமாற்றம். தவிப்பு. தானாகவே நடக்கும் செயல்களை அருகே காண்பதில் இருக்கும் அச்சம்.

ஆங்காங்கே நின்றவர்கள் சடுதியில் சூழ்ந்து கொண்டார்கள். விஷயத்தை கடகடவென கிரகித்துக் கொண்டார்கள். ஆளாளுக்கு கண்கள் விரிந்தன. கவலையாய் அவளை சுற்றி நின்றார்கள். சிலரின் உடல் கூட நடுங்கின.

"ஐயோ.. இன்னிக்கு அம்மாசை கண்ணு... இப்பிடில்லாம் நடக்க கூடாதே.... பதறாம போயி மலையூத்தம்மனை நல்லா கும்புட்டுட்டு... மறுக்கா அவ முன்னலயே தாலிய கட்டிக்கிட்டு வாங்க..." பெரியவர் நா தவிக்க பதறினார்.

"தாலி பூசாரிக்கிட்ட இருக்கு" என்று எடுத்துக் கொடுத்தார் ஒருவர்.

"அய்யோ இப்பிடி ஆகிருச்சே..." என்ற கிழவி முகம் நடுங்கினாள். வெயில்... வியர்வை சொட்ட விளாசிக் கொண்டிருந்தது.

சூழலை உணர்ந்த ரம்யாவின் கை.... மெல்ல தன் கழுத்தை தடவியது. திகைக்க பார்த்தாள். அதிர்ச்சியோடு அவள் கண்கள்... கணவன் சத்யனை அர்த்தத்தோடு கூர்ந்தது. அவனும் அவளையே செய்வதறியாது பார்த்தான். தாலி இல்லாத அவள் கழுத்து அங்கே இருந்த யாவரையும் இனம் புரியாத அச்சத்தில் ஆழ்த்தியது.

அவள் இல்லீங்க.... என்பதற்குள் "பொண்ணுல்லீங்களா... பயந்துக்கத்தான செய்யும்...." பொதுவாக பேசினாலும்... அவள் பக்கம் திரும்பி.. "ஒன்னும் பயப்படாதம்மா... எதும்

ஆகாது... நட... நாங்களும் வர்றோம்" என்ற ஒரு முதிர் ஜோடி... முன்னால் மலையூத்தம்மன் கர்ப்ப கிரக பக்கம் வேகமாய் நகர்ந்தது.

இறைவழிபாடு முடிந்து கீழே இறங்க முற்பட்டவர்கள் கூட அப்படி அப்படியே நின்று சூழ்ந்து கொண்டார்கள்.

"சும்மாவா.... மங்கிலியம்... இல்லீங்ளா... நினைச்சாவே ஒடம்பு நடுங்குதுங்க" என்றவன் பெரும் பக்தனாக தெரிந்தான். அவனும் கூட சேர்ந்து கொண்டான்.

"இப்பிடியா கவனமில்லாம இருக்கறது பாப்பா.. போ...போயி அம்மா முன்னால நின்னு வேண்டிக்கிட்டு மறுபடியும் கட்டிக்கிங்க. நல்லா வாழ வேண்டியவங்க..." சடை பிடித்த சாமியார் ஒருவர் வாழ்த்தி கடந்தார்.

"மலையூத்தம்மன்கிட்ட வந்துட்டு இப்பிடி ஆகிற கூடாது தாயி.. அவ யாருக்கும் எந்த காலத்துலயும் கெடுதல் செய்ய மாட்டா. என்னவோ நேரஞ்சரி இல்ல. நீ கவலப்படாத... ஜாம் ஜாம்னு தாலி கட்டி அனுப்பறோம்.." கிழவி ஒன்று பற்கள் கிடுகிடுக்க பேசியது.

"பேரு என்ன... எங்கிருந்து வரீங்க..." கேள்வி ஒரு பக்கம் வந்தாலும்... "அட அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாமுங்க. மங்கிலியம் கழுத்துலல்லாம புள்ள எப்பிடி நடுங்குது... அதுகிட்ட போயி... முதல்ல தாலி கழுத்துல ஏறட்டும்..." என்ற பெருசு வேகமாய் நடையை எட்டி போட்டது.

அவள் பேச்சற்று தடுமாறினாள். ஆனால் பேசவும் தடுமாறினாள். சத்யன் மனதுக்குள் போராட்டம். நடுக்கம். தவிப்பு. அவனை பேச விடாத... சூழ்ந்திருந்த கருணை அவனை புதிதாக எதையும் சிந்திக்க விடாமல் செய்தது.

"எப்பிடி அவுந்துச்சு தாலிக்கொடி... கொஞ்சம் கவனமா இருந்திருக்கணும்ல கண்ணு..." கிராமத்து மனிதர்கள் தாலிக்கு தரும் மரியாதையும்.. அது மீது கொண்ட மகத்துவமும் ஒவ்வொருவர் முகத்திலும் வெயிலாக பளிச்சிட்டது.

"நீ எதுவும் பேச வேணாம் கண்ணு.. பொம்பளைங்களுக்கு இது எவ்ளோ கஷ்டம்னு தெரியும். அல்லாம் சரி ஆகி போகும் போ..." என்றது ஒரு தாய்.

அவள் பேச வந்தாளோ... சூழலை உடைக்க முயற்சித்தாளோ... எல்லாமே அடை பட்டது. அவனுக்கு பேச என்னவோ இருப்பது போல தடுமாறினான். அவர்களை பேச விடாத கூட்டம் பேசிக் கொண்டே இருந்தது. கிட்டத்தட்ட சாமி கும்பிட வந்த கூட்டம் முழுவதும் அவர்களை சூழ்ந்து கொண்டது. இறங்குவோர் ஏறுவோர் என்று எல்லாருமே

அவர்கள் பின் சேர்ந்து கொண்டார்கள்.

இன்னும் தாலி பலம் கெட்டியாத்தான் ஆகும்...." என்றபடியே அம்மனுக்கு முன் வானத்துக்கு கைகளை ஏந்தி கும்பிட்டு விட்டு... இந்தா தாலி... என சத்யனிடம் நீட்டி..." அம்மனை நினைச்சிட்டு கட்டுப்பா.... எல்லாஞ்சரியாப் போகும். நாங்கெல்லாம் ஒங்குடும்பம் மாதிரி தான்... " என்றார் பூசாரி.

கைகள் நடுங்க ரம்யாவின் கண்களை பார்த்தபடியே கட்டினான். சடுதியில் அங்கே ஒரு திருமணம் படபடவென நடந்தேறியது. பாறைக்குள்ளிருந்து மலையூத்தம்மன் கண்கள் குளிர காண்பது போல தான் தெரிந்தது.

"அறுபதாவது கல்யாணம் மாதிரி... இது முப்பதாவது கல்யாணம்னு வெச்சுக்கலாம்" என்று கலாய்க்கவும் செய்தது ஒரு நடுத்தரம்.

திகைத்த கண்களோடு தாலியை கைகள் நடுங்க கட்டிய சத்யனின் கண்கள்... கண்ணாடியை தாண்டி சுழன்றது. கழுத்து நிறைந்து தவித்த ரம்யா... செய்வதறியாது திகைத்து பார்த்தாள். என்ன நடந்து கொண்டிருக்கிறது என்ற படபடப்பு இருவருக்கும். இருவர் கண்களும் ஒருசேர எங்கோ தேடின.

சிரித்துக் கொண்டு கூட்டத்தோடு கூட்டமாக நின்று..." மலையூத்தம்மன் இருக்க.. எதுவும் கெடுதல் நடக்காது. எல்லாம் நல்லதுக்கு தான்..." என்று சத்தம் போட்டு எல்லாருக்கும் அன்பை பரிமாறிக் கொண்டிருந்த நண்பன் வெற்றியை சத்யனும் ரம்யாவும் அர்த்தத்தோடு பார்த்தார்கள். முறைத்தார்கள்.

"நீ தான எங்களுக்கு கல்யாணம் பண்ணி வெச்ச. என்னவோ சரி இல்ல வெற்றி. நாங்க பிரிஞ்சர்றோம். போதும்.. எதுவும் பேசி கன்வின்ஸ் பண்ண ட்ரை பண்ணாத. நாங்க யோசிச்சு தான் இந்த முடிவுக்கு வந்துருக்கோம். காதலித்தோம், வீட்ட பகைச்சுக்கிட்டு கல்யாணமும் பண்ணினோம். ஆனா இப்ப ஒத்து வராதுனு தோணுது...." பேசிக்கொண்டே தாலியை கழற்றி வெற்றியின் கையில் கொடுத்து விட்டு... "நீயே இத சாமி உண்டியல்ல போட்ரு.... இங்கதான கல்யாணம் பண்ணி வெச்ச. இங்கயே பிரிஞ்சுக்கலாம்..." என சுமூகமாக கை குலுக்கி பிரிந்து சத்யனும் ரம்யாவும் ஒருவர் பின் ஒருவர் மலையை விட்டு இறங்கும் அந்த நேரத்தில் தான்... வெற்றி செய்த தில்லாலங்கடி...... தாலிக்கொடி கீழ கிடக்குது.. அதுவும் செவப்பு கலர் சுடிதார் போட்ட பொண்ணு தான் தவற விட்டுச்சு... பாத்தேன். கூப்புட கூப்புட வளைவு தாண்டி கீழ போய்டுச்சு... கேட்ல கூப்ட்டு சொல்லுங்க... என அடையாளம் சொல்லி அளப்பறையை ஆரம்பித்தது.

"முன்ன தான் யாரும் இல்லாம பண்ணினோம். இப்போ பாரு... ஊரே கூடி நின்னு பண்ணி

வெச்சிருக்கு. இது சாமி போட்ட முடிச்சு. அதை நீங்களே நினைச்சாலும் அவுக்க முடியாது. தாலி எவ்ளோ பெரிய விஷயம் பாத்தியா. அது வாழ்நாள் நம்பிக்கை. தாலி கழுத்துல இருந்து தவறி விழுந்துருச்சுன்னு ஒவ்வொருத்தரும் பட்ட பாட்ட பார்த்தீங்களா. நீங்க பயந்தது பரிதவிச்சது எல்லாத்தையுமே... தாலிக்காகதான்னு நினைச்ச அந்த தாலி மகத்துவத்தை பார்த்தீங்களா. தாலிக்கு ஒன்னுங்கவும்... மக்கள் எப்பிடி கூடினாங்க. இத்தனை பேர் நம்பிக்கைய...

இன்னொரு முறை அதை கழற்றி கெடுத்துற கூடாது ரம்யா. உங்களுக்கு ஆயிரம் பிரச்னை இருக்கும். அதெல்லாம் தீர்க்க என்னால முடியாது. ஒருவேளை இந்த சாமி தீர்த்து வைக்கலாம். இல்ல நீங்களே பேசி தீர்க்கலாம். எது எப்பிடி இருந்தாலும்... பிரிஞ்சு போறது நியாயமும் இல்லை.. காதலும் இல்ல. உக்காந்து பேசுங்க... மனசு விட்டு தவறுகளை சரி செய்ய முயற்சி பண்ணுங்க. இதுக்கு மேலயும் பிரியறது தான் தேவைன்னா... அது உங்க இஷ்டம். நீங்களே தாலியை கழற்றி கோயில் உண்டியல்ல போட்டாலும் சரி... கீழ போட்டுட்டு போனாலும் சரி...என்னை விட்ருங்க...." என்று கிளம்பிய வெற்றி... ஒரு நொடி நின்று திரும்பி "ஃபன் பண்ணினது போதும் பிரெண்ட்ஸ்... இனி குடும்பம் நடத்துங்க.." என்று சொல்லி நகர்ந்தான்.

மலையூத்தமனே அவன் உருவத்தில் வந்து பேசியது போல தெரிந்த அந்த ஒரு நொடி... அவர்கள் மௌனமாய் நடந்ததை ஏற்றுக் கொண்டார்கள்.

நல்ல நண்பன் கடவுளாகிறான். நம்பிய கடவுள் நண்பியும் ஆகிறாள்.

"இங்க வந்துட்டு தப்பு நடக்க விடுவாளா.... மலையூத்தம்மன்" பக்தர்களின் முகம் நிறைந்த நம்பிக்கை... ஆழ் மனதில் இருந்து பொங்கியது.

கதவில் நின்ற பாதுகாப்பாளர் முதற்கொண்டு வருவோர் போவோர் எல்லார் முகத்திலும் கல்யாணக்கலை. வாழ்த்துகள் குவிய.. அன்பின் சிரிப்பலைகள் ஆங்காங்கே. ஆளாளுக்கு அதே பேச்சு. அதே திகைப்பு. அதே சமாதானம்.

மலையை விட்டு இறங்கி தூரமாய் நடந்து கொண்டிருக்கும் இருவர் கைகளும் இணைந்து கொண்டது போல தான் தெரிந்தது.

மலையூத்தம்மன் இப்போது மலை உச்சியில் வீற்றிருக்கிறாள்.

—

கவிஜி

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

*விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.*

*மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.*

*நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.*

*நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...*
*மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com*
*பகிரி: +91 8220567322*

*படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...*
*மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com*
*பகிரி: +91 8220567322*

*தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...*
*பகிரி: +91 8220567322*

*இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...*

*அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.*

—

*கி. மாணிக்கம்,*
*திறவுகோல் ஆசிரியர், குழு.*